**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 04/2013</u>**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28–** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 28.07.2025**

**பெயர் – நந்தினி**

**க/பெ – இராஜேந்திரன்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.48 p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

13. 1ம் பிரதிவாதியான பத்மாவதி என்பவர் எனது பெரியப்பா ஸ்ரீநிவாசனின் மனைவி என்றால் சரிதான். அவருக்கும் சொத்தில் ஒரு பங்கு உள்ளதால் தான் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்மாவதி உயிருடன் இருக்கிறாரா என்றால் கோரோனா சமயத்தில் இறந்துவிட்டார். இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் அவர் இறந்தார் சரிதான். ஆகையால் அவரின் பங்கு இப்போது அவரின் வாரிசுகளுக்கே சேரும் என்றால் சரிதான். பத்மாவதி இறந்த செய்தி உடனே எனக்கு தெரியும், அவர் எனக்கு பெரியம்மா ஆவார். அவரின் இறுதிச்சடங்கு சமயத்திலே தெரியும்.

14. பத்மாவதி இறந்த செய்தியை எனது வழக்கறிஞர்க்கு தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அந்த செய்தியை நீதிமன்றத்திற்கு தெரிவித்தேனா என்றால் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அது சம்பந்தமாக பத்மாவதியம்மாளின் வாரிசுகளை சேர்ப்பதற்கு ஏதேனும் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன், அவர் செய்திருப்பார். எனது பெரியப்பா ஸ்ரீநிவாசநாயுடுவின் மூத்த மகன் தான் 2ம் பிரதிவாதியான திருமலை என்றால் சரிதான். அந்த திருமலைக்கு திருமணம் ஆகவிட்டது. மனைவி பெயர் ஷியாமளா, 2 மகன்கள் அவர்களின் பெயர் சீத்தாராமன் (மூத்த மகன்), புரந்தன்ராஜ்.

15. சீத்தாராமனுக்கு திருமணம் ஆகிவிட்டது. புரந்தன்ராஜ் மேஜர் தான். 2ம் பிரதிவாதி சுமார் 2 வருடங்கள் முன்பு இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் மனைவி, 2 பிள்ளைகள் என்றால் சரிதான். எதற்காக 2ம் பிரதிவாதியை இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டார் என்றால் அவருக்கு பாக உரிமை உண்டு என்ற அடிப்படையில் தான் 2ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்தோம். 2ம் பிரதிவாதியின் இறுதிச்சடங்கிற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். 2ம் பிரதிவாதி இறந்தபோதே அவரின் இறப்பு எனக்கு தெரியும்.

16. 2ம் பிரதிவாதியின் வாரிசுகள் அவரின் மனைவி, 2 மகன்கள் என்ற விவரமும் எனக்கு தெரியும். ஆகையால் 2ம் பிரதிவாதியின் பாகத்திற்கு யார் உரிமையாளர் என்றால் அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு சேர வேண்டும். பிரதிவவாதியின் இறந்த விவரத்தையும், அவரின் வாரிசுகள் விவரத்தையும் உடனடியாக எனது வழக்கறிஞரிடம் தெரிவித்தேன் என்றால் தெரிவித்தேன். வாரிசுகளை சேர்ப்பதற்கு எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. 6ம் பிரதிவாதியான பானுமதி திருமலை அவர்களின் தங்கை எனது பெரியப்பா ஸ்ரீநிவாசநாயுடு அவர்களின் மகள் ஆவார். அவர் கணவரின் பெயர் பாலகிருஷ்ணன். 6ம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவர் மரணத்திற்கும் நான் சென்றுள்ளேன்.

17. பானுமதியின் மகன் ராஜேஷ். பாலகிருஷ்ணன் இறந்துவிட்டார். முதலில் பானுமதி பிறகு பாலகிருஷ்ணன் இறந்தனா். பானுமதி இறந்த வருடம் 1981–1982. நான் வழக்கு தாக்கல் செய்தது 2012. அவ்வாறு இருக்கையில் 1981–1982 இறந்து போன எப்படி தரப்பினராக சேர்த்தோம் என்றால் எனது வழக்கறிஞரிடம் பானுமதி இறந்துவிட்டதாக கூறிவிட்டேன். எனது வழக்கறிஞரடம் பானுமதி ஏற்கனவே இறந்துவிட்டார் அவரின் வாரிசான ராஜேஷ் தான் பிரதிவாதியாக சேர்க்கவேண்டும் என்று கூறினேன். 6ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரை தவறுதலாக இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துவிட்டோம்.

18. வழக்கிற்கு பின் இறந்துபோன 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வாரிசுகளை தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் முக்கியமான தரப்பினர்களை சேர்க்காத காணரத்தினால் இந்த தாவா பாதிக்கப்பட்டுள்ளது என்றால் அவர்கள் வரவில்லை. அந்த பாகங்கள் அவர்களின் வாரிசுகளுக்கு உரிமை ஆகுமா என்றால் தாத்தாவின் பாகத்தில் ¼ உரிமை அவர்களுக்கு உள்ளது. ¾ உரிமை எங்களுக்கு உள்ளது. 1 , 2 பிரதிவாதிகள் நீதிமனற்த்திற்கு ஆஜராகாத காரணத்தினாலேயே அவர்களின் வாரிசுகளுக்கு அவர்களுடைய பாகங்களில் உரிமை உண்டு என்றால் உண்டு. 8ம் பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வரதராஜநாயுடுவை எனக்கு தெரியும். கிராம பஞ்சாயத்து தலைவர் மற்றும் சோழவரம் பஞ்சாயத்து யூனியனின் சேர்மன் என்றால் சரிதான். வரதராஜநாயுடுவின் தம்பிகள் 4 பேர் மோகன், முத்துநாயுடு, இராமமூர்த்தி மற்றும் ரகுநாதநாயுடு என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வரதராஜநாயுடுவிற்கு சொத்துக்கள் ஏராளம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

19. வரதராஜநாயுடுவின் தந்தை பெயர் ராகவநாயுடு என்றால் தெரியாது. ராகவநாயுடுவிற்கு 5 பிள்ளைகள் அதில் வரதராஜநாயுடுதான் மூத்தவர் என்றால் எனக்கு தெரியாது, தலைவர் என்ற முறையில் மட்டும் தான் வரதராஜநாயுடுவை தெரியும். தாவா சொத்துக்கள் 9ம் பிரதிவாதி ேஹமலதாவின் ஸ்வாதீன அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஸ்வாதீனத்தில் உள்ளார் என்றால் வில்லங்க சான்றில் அவர் பெயர் தான் உள்ளது. என்ன வில்லங்க சான்று என்றால் மோகனநாயுடுவின் மகளான ேஹமலதாவின் பெயரில் தான் சொத்து உள்ளது. ேஹமலதா யார் என்றால் 9ம் பிரதிவாதி ஆவார். வில்லங்க சான்றிதழில் ேஹமலதாவின் பெயரில் என்ன உள்ளது என்றால் எனது தாத்தா பெயரில் உள்ள தாவா சொத்துக்கள் ேஹமலதாவின் பெயரில் உள்ளது. வில்லங்க சான்றிதழ் நான் வாங்கினேனா என்றால் தெரியவில்லை.

20. அந்த வில்லங்க சான்றிதழை எனது தாத்தா பெயரில் உள்ள இடத்திற்கு தான் போட்டேனா என்றால் 1.53 செண்ட்டிற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன் 1.53 ேஹமலதாவின் பெயரில் உள்ளது. ேஹமலதாவின் தந்தையான 8ம் பிரதிவாதி தான் ஸ்வாதீனத்தில் தாவா சொத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள்

8ம் பிரதிவாதி மற்றும் சகோதர்ரகள், அவரது தாயார் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையும் 8ம் பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதா என்றால் அது அவர்கள் குடும்ப விவரம், எனக்கு தெரியாது. என்படி தாவா சொத்து எனது தாத்தாவிற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 1956ல் அவர் வாங்கினார். அந்த பத்திரத்தில் மொத்தம் தாவா சொத்து உட்பட 5 ஏக்கர் 51 செண்ட் நிலம் உள்ளது என்றால் 153 செண்ட் கூட்டுப்பட்டாவில் உள்ளது.

21. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் நன்றாக படிப்பேன். வா.சா.ஆ 1 பத்திரத்தை எப்போதாவது படித்துள்ளேனா என்றால் படித்ததில்லை. கூட்டுப்பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கூட்டுப்பட்டாவை கொடுத்திருக்கிறேன். அந்த கூட்டுப்பட்டா யார் வழங்கியது என்றால் அரசாங்கம் கந்தசாமியின் பிள்ளைகளான 4 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அரசாங்கம் வழங்கி இருந்தால் அதில் அரசு முத்திரையுடன் வட்டாச்சியரின் கையொப்பம் இருக்கும் என்றால் என் வழக்கறிஞரிடம் அதை தான் கொடுத்துள்ளேன். அந்த கூட்டுப்பட்டாவை ஆதராமாக வைத்து தான் பாக உரிமை கோருகிறோம். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கூட்டுப்பட்டாவினை எப்போது வேண்டுமானாலும் சான்றிட்ட நகலை பெறலாம் என்றால் சரிதான். அவ்வாறு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கூட்டுப்பட்டாவின் அசலினை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

22. பாக்பிரிவினை தேதியில் இருந்து தாவா சொத்துக்கள் 8ம் பிரதிவாதியின் ஸ்வாதீன அனுபவத்தில் தான் இருந்து வந்தன என்றால் தெரியாது. அந்த பாகப்பிரிவினைக்கு முன்பாக 8தம் பிரதிவாதி மற்றும் அவர்கள் சகோதர்கள் அடங்கிய ஏககுடும்ப ஸ்வாதீன அனுபவத்தில் தாவா சொத்தில் இருந்து வந்தனர் என்றால் எனக்கு தெரியாது. கூட்டுப்பட்டாவின் பட்டா எண் என்ன என்றால் தெரியாது. சர்வே எண் தான் தெரியும். அந்த கூட்டுப்பட்டாவில் குறிப்பிட்டுள்ள நிலத்திற்கு நான் கிஸ்து கட்டியுள்ளேனா என்றால் மூத்த மகன் கட்டியிருக்கலாம். அதற்கான ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்றால் தெரியாது. அரசாங்கத்திற்கு செலுத்துவது தான் கிஸ்து. அதற்கு அரசாங்கத்தால் தண்டல் நகல் ஏதேனும் வழங்கப்பட்டதா என்றால் தெரியாது. வா.சா.ஆ1–ல் 5 ஏக்கர் 51 செண்ட் உள்ளது என்றால் 5 ஏக்கர் குறித்து எனக்கு தெரியாது. 1.53 பற்றி தான் எனக்கு தெரியும்.

23. 1.53 மட்டும் பிரிக்கப்படாமல் உள்ளது. தாவா சொத்துக்களை தவிர்த்து அனைத்து சொத்துக்களையும் எனது தந்தை மற்றும் அவரின் சகோதரர்கள் பாகம் பிரித்து கொண்டார்கள். 1 ஏக்கர் 53 செண்ட் மட்டும் பிரிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்றால் அது எப்படி விடுபட்டது என்று எனக்கு தெரியவில்லை. என்பார்வைக்கு வந்த பிறகு அது கூட்டுப்பட்டாவில் தான் உள்ளது. எனது தாத்தாவின் சொத்து என் தந்தைக்கு என் தந்தையின் சொத்து எனக்கு. எனது தாத்தாவிற்கு தான் பிரிக்கப்படாமல் இருந்ததற்கான காரணம் தெரியும். 1981ல் ஜனவரி மாதத்தம் முதலில் ஸ்ரீநிவாசநாயுடு அவரின் சகோதரர்கள் ஏககுடும்பமாக இருந்த காரணத்தால் அவர்களுடைய குடும்ப செலவிற்காக தாவா சொத்துக்களையும் அது தவிர 13 செண்ட் சர்வே எண் 513 வடமேற்கு மூலையில் 13 செண்ட் ரூ.20,000/– வரதராஜநாயுடு அவர்கள் சகோதர்கள் அடங்கிய குடும்பத்திற்கு ரூ.20,000/– பெற்றுக்கொண்டு சொத்துக்களையும் மற்ற சொத்துக்களையும் ஸ்வாதீனத்தையும் ஒப்படைத்தனர் என்றால் சரியல்ல.

24. அந்த தேதியில் இருந்து 1981 ஜனவரி முதலில் அவர்தான ஸ்வாதீனத்தில் இருந்தார் என்றால் தெரியாது. வில்லங்கம் போட்ட பிறகு தான் எங்களுக்கு தெரியவந்தது. நாங்கள் யாரும் எழுதி கொடுக்கவில்லை. தாவா சொத்திற்கு மட்டும் தான் வில்லங்க சான்று போட்டோம். வா.சா.ஆ 1 பத்திரத்தில் தாவா சொத்துக்கள் அடங்கியதா என்றால் அடங்கியுள்ளது. பத்திரம் பதிவு செய்த தேதியில் இருந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம் வரையில் வில்லங்கம் போடப்பட்டதா என்றால் எனது பெரியப்பாவின் மகன் குமார் போட்டுப்பார்த்து சொன்னார். வில்லங்க சான்று வாங்கினேனா என்றால் வாங்கினேன். அந்த வில்லங்க சான்றிதழை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த வில்லங்க சான்றிதழைப்பார்த்தால் எந்த காலக்கட்டத்தில் போட்டுள்ளோம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் வழக்கறிஞரிடம் தான் உள்ளது. சாதாரணமாக வில்லங்க சான்றிதழ் சொத்து வாங்கிய தேதியில் இருந்து எந்த வரை தேதி வரை கேட்கிறோமோ அந்த காலக்கட்டத்திற்கு தான் தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு வாங்கப்பட்ட வா.சா.ஆ–1–ஐ தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 05.10.p.m.**